8th November 1965]

(*b*) if so, the extent of damages caused; and

(*c*) whether there is any proposal to re-construct the damaged building and the estimated cost thereof?

THE HON. SRI N. NALLASENAPATHY SARKARAI MANRADIAR: (*a*) Yes.

(*b*) The extent of damage to the building with furniture is estimated at Rs. 1,26,500. The loss on account of destruction of records cannot be estimated in terms of money.

(*c*) Yes. The estimated cost is Rs. 1,12,000.

திருக்கோயிலூர் சப்-ஜெயில்

*355 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோயிலூர் சப்-ஜெயிலில் சிறையாளிகளை அடைக்கும் அறையின் தரையில் தார் பூசப்பட்டிருப்பது உண்மையா?

கனம் திரு. கோ. பூவராகன்: ஆம்.

திரு. எம். எஸ். மணி: திருக்கோயிலூர் சப்-ஜெயிலில் தரையில் தார் பூசப்பட்டிருக்கிற இடத்தில் படுப்பதால் உஷ்ணம் ஏற்பட்டு அதன் காரணமாக நோய் ஏற்படுகிறது என்பது உண்மையா? அந்த நிலையைப் போக்க அரசாங்கம் மாற்று முறைகளைக் கையாள முன்வருமா?

கனம் திரு. கோ. பூவராகன்: தாரைச் சுரண்டிவிட்டு சிமெண்ட் போடுவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

Forged Contingent Bills

*356 Q.—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that two contingent bills of the Stationery and Printing Department to the value of Rs. 66,000 have been forged during April-May, 1961; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டக் கருவூலத்தில் இந்தப் போலிப் பட்டியை அனுமதித்ததற்காக அக்கருவூ அதிகாரி, கணக்கர், தலைமைப் பொருளாளர் ஆகியோர் பொறுப்பாளிகளாக்கப்பட்டுள்ளனர். கருவூல அதிகாரி இப்பொழுது ஓய்வு பெற்றுவிட்டார். அவர் மீது நடவடிக்கை தொடங்கப்பட்டுவிட்டது. நிர்ணய நடைமுறைகளைப் பின்பற்றி இறுதி உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். மற்ற இரு அதிகாரிகள் சம்பந்தமாக, துறையளவில் நடவடிக்கைகளை முடிக்க விரைவாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.